செ.வெ.எண் : 19/ ஜூலை நாள் : 20.07.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

# நயினார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களுக்கு இன்று (20.07.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள், நேரடியாகச் சென்று வேளாண்மைத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியம் பாண்டியூர் கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பாக திரு.கோபால் என்ற பயனாளிக்கு ரூ.20,865/- மானியத்தில் தெளிப்பு நீர் பாசனம் கருவி வழங்கப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பயனாளியிடம் கேட்டறிந்தார். அப்போது, தனக்கு சொந்தமான ஒரு ஏக்கர் வயலில் நிலக்கடலை, காய்கறி மற்றும் தீவனப்பயிர்கள் வளர்த்து வருவதாகவும், வேளாண்மை துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ள தெளிப்பு நீர் பாசன அமைப்பு மூலம் குறைந்த தண்ணீரைக் கொண்டு அதிக சாகுபடி பெற முடிகிறது எனவும் தெரிவித்தார். அதேபோல, தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டப் பணிகள் குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நயினார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ரூ.2 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் வேளாண்மை விரிவாக்க மையத்தின் கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்கள். பணிகளை தரமான முறையில் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் கட்டுமானப் பணியின் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் அறிக்கை சமர்ப்பித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக நயினார்கோவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடு குறித்தும், பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், ஊரக பகுதிகளில் நடத்தப்படும் காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் குறித்த விபரங்களை சுகாதாரத் துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் எவ்வித அலட்சியமுமின்றி தொடர்ந்து விழிப்புடன் பணியாற்றிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக கங்கை கொண்டான் கிராமத்தில் ரூ.5.21 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலை பணிகளையும், தவளைக்குளம் கிராமத்தில் ரூ.2.15 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ள நயினார்கோவில்-தவளைக்குளம்-தேவிபட்டினம் வரையிலான சாலை பணிகளையும், நயினார்கோவிலில் ரூ.7 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.டாம் பி.சைலஸ், துணை இயக்குநர் திரு.எஸ்.எஸ்.சேக்முகமது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பி.தனுஷ்கோடி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.திருநாவுக்கரசு, திரு.சந்திரமோகன், வட்டாட்சியர் திரு.தமீம்ராஜா உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**